# போர் விளைவுகளை ஆராய ஐ. நா. விசேட பிரதிநிதி


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 24 இதழ் 265

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 09 — 11 — 1993


# இலங்கை வருகை

(கொழும்பு)

ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் விசேட பிரதிநிதி திரு. பிரான்சிஸ் டெங், இவ்வாரம் கொழும்பு வருகிறார். வடக்கு-கிழக்குப் பகுதியில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் போர் குறித்து இவர் இலங்கை அரசுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்

(4ம் பக்கம் பார்க்க)

## அநுரா விவகாரத்தில் அரசு திணறல்!

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி அல்லது நிதியமைச்சர் பதவி திரு. அநுரா பண்டாரநாயக் காவிற்கு வழங்கப்படலாமென 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு ராஜாங்க

(4-ம் பக்கம் பார்க்க)

## படைதளபதிமீதுமனிதஉரிமை அமைப்புபாய்ச்சல்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல் திட்டங்களை பத்திரிகைகள் வெளியிடுவதை தணிக்கை செய்யவேண்டுமென்று ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அரசுக்கு தெரிவித்த ஆலோசனை பெருங்கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தமான நாடாளுமன்றக் குழுவின் செயலாளர் மகிந்த ராஜபக்ஷ ராணுவத்தளபதியின் ஆலோசனையை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

# போரை நிறுத்தி இனபிரச்னைக்கு அமைதிதீர்வுகாணவலியுறுத்து

## கனேடியசட்டவல்லுநர் ஜனாதிபதிடி.பி.க்குகடிதம்

(ஒட்டாவா)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்னைக்கு அமைதித்தீர்வு காணுமாறு கனடாவின் பிரபல சட்ட நிபுணர் மார்க்கஸ் சேர்க்கர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவை கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்கலாமென தமிழ்க் குழு அச்சம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் புலிகளின் தாக்குதல்களுக்கு தமது முகாம்கள் இலக்காகலாமென இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ் குழு ஒன்றின் முக்கியஸ்தர் ஒருவர் 'சண்டே ஐலண்ட்' டிற்கு தெரிவித்துள்ளார்.

வடக்கில் தாக்குதல்களை நடாத்தும் நோக்கில் கிழக்கிலிருந்து படைகள் வடபகு

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசின் கடும் போக்கினால் பேச்சுக்கள் சாத்தியமாகாது

## — தலைவர் பிரபாகரன்

(கொழும்பு)

இலங்கை அரசின் கடும் போக்கு காரணமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேலும் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தக் கூடிய சூழ்நிலைகள் ஏதும் இல்லையென விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கூறியதாக பி. பி. சி. தெரிவித்தது.

பி. பி. சி. இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது! இனத்தகராற்றை வெறும் பயங்கரவாதப் பிரச்னையென ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மீண்டும் மீண்டும் விபரித்து வருகிறார்.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அண்மையில் ஆற்றிய உரையானது விடுதலைப் புலிகளும் சமாதானப்பேச்சு நடத்தும் சூழ்நிலை எதுவும் இல்லையென கருதுகிறார்கள் என்பதனை கோடிட்டு காட்டுவதாக உள்ளது.

ஒப்பரேஷன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் பின் மேற்படி கருத்தைவெளி

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் வட பகுதியிலுள்ள ஆயிரக்கணக்

(4-ம் பக்கம் பார்க்க)



## தொடரும் போரினால் கிழக்கில் 5,000 பெண்கள் விதவைகளாகி அவதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் போரினால் கிழக்கில் மட்டும் 5000 திற்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியிருப்பதாக தற்போதைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பெண்களின் கணவன்மார் இராணுவத்தினரா

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. பகுதியில் 4 இளம் பெண்கள் படையினரால்கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்திபுரம் பகுதியில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இளம் தமிழ்ப் பெண்கள் உட்பட பெருமளவு தமிழ் இளைஞர்கள், பழுகாமம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

உன் காலடியில் எதிரியின் -
கவச வாகனங்கள்
தலைக்கு மேலே குண்டு வீச்சு -
விமானங்கள்
வலது பக்கம் பீரங்கிப் படகுகள்
இடது பக்கம் இராணுவப் படைகள்
இன்னும் உறங்கி என்னடா செய்வாய்
விழிகளைத் திறந்து வெளியே வாடா.

## வட-கிழக்கு சமஷ்டித்தீர்வுக்கு எதிர்க்கட்சிகள் உடன்பாடு?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டா என எதிர்க்கட்சி தலைவரின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்ததாக 'சண்டே ஐலண்ட்' கூறியுள்ளது.

மேலும் பிரபல பௌத்த பிக்கு ஒருவர் கூறுகையில்;

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றது

பாலாஜியின் விடுதலை புதிர் கள் 150. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும், தூர்க்கா சுன்னாகம். மொடன் (நவீன களஞ்சியம்) நெல்லியடி, சிவம் சாவகச்சேரி, மீ பெல்ஸ் (B) கிளிநொச்சி. விலை: 20. (ஏ-3556)

### அராலியூரரின் நாடகங்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலி பரப்புகின்றன. நீங்களும் நடித்துப் பாருங்களேன்! மாணவரும் நடிக்கலாம் நூல்கள்-1, வெட்டிக்காரர்கள்-2, முதலாம்பிள்ளை 30/-. இ-577)

### நாளை மீண்டும் சனிமாற்றம்

31-5-95 வரை கும்பராசியிலே சஞ்சரிக்கும் விளாழன் சனி மாற்றங்கள் (ரூபா 10/- பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை யாழ்ப்பாணம். (இ-585)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைவலி, சருமநோய்கள், மாத விடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-547)

### COMPUTER கல்வி

Diploma in Computer Programming — Basic Language. 4 மாத கால பாடநெறி. செவ்வாய், வியாழன் வகுப்புகள். புதிய பிரிவு ஆரம்பம்: 18-11-93 10-30 மணி கட்டணம் மாதம் ரூ 400/- மட்டுமே. உறுதியான கல்வியைப் பெற School of Business Administration. 16, 3rd Cross St Jaffna. C-584)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


# யுத்த முனைகளில் பலியான படையினருக்கு தெற்கில் அஞ்சலி

(கொழும்பு)

யுத்தமுனைகளில் பலியான படையினருக்கு நேற்று முன்தினம் தேசியமட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறந்த படையினரின் நினைவாக காலை 8 மணி முதல் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அங்கத்தவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வுகளில்கலந்து கொண்டனர்.

இலங்கை முன்னாள் படைவீரர் சங்கம் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் உள்ள யுத்த ஞாபகார்த்த தூபியில் ஞாபகார்த்த பிரார்த்தனையை நடத்தியது.

யுத்தமுனைகளில் பலியான படையினரைக் கௌரவிக்கும் முகமாக காலை 8 மணி முதல் 8-02 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலியைச் செலுத்துமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது. இதேவேளை றிசேர்வ் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. (தி)

# மாவீரர் தின ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகிறது

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்குப் பகுதியில் மாவீரர் தினம் பற்றிய பதாகைகள், வீதிகள், சந்தைகள் தோறும் கட்டப்பட்டுள்ளன.

மானிப்பாய் சந்தைக்கருமையிலுள்ள பிரதான வீதிக்கு சமீபமாக சுமார் நூறு அடி நீளமான பிரமாண்டமான பந்தல் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. சுன்னாகத்திலும் இதுபோன்ற பிரமாண்டமான பந்தல் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பல இடங்களிலும் மாவீரர் தினத்தை ஒட்டி ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. —72-இ

# தமிழ் சாகித்திய விழா சிறந்த நூல்களுக்கு பரிசு

(கொழும்பு)

1992 ஜனவரி 1ம் திகதி முதல் 1992 டிசம்பர் 31-ம் திகதி வரை வெளிவந்த நூல்களின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்களிடமிருந்து சாகித்திய நூல் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

நூலாசிரியர் இலங்கையராக இருத்தல் வேண்டும். நூல்கள் இலங்கையில் அல்லது இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டதாயிருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை பணிப்பாளர், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்று 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதிக்கு முன் ஐந்து நூல் பிரதிகளுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# அகதிகள் வருகையை பிரான்ஸ் கட்டுப்படுத்தும்

(பரிஸ்)

பிரான்ஸ் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு வசதியாகவே பிரெஞ்சு அரசு அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசனத் திருத்தங்களை பிரெஞ்சு நாடாளுமன்றம் சட்டமாக நிறைவேற்றி அரசியல் சட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ளது. ஆனால் இவை அரசியல் அமைப்புக்கு மாறாக இருப்பதாகக் கூறி அதனை அரசியல் சட்ட நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

இந்நிலையில், பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமான பிரச்னை எழுந்துள்ளது.

அரசியல் சட்டசாசனத்தை மாற்றவேண்டுமானால் ஜனாதிபதி காங்கிரஸைக் கூட்டவேண்டும். அல்லது அவர் ஒரு கருத்துக் கணிப்பை நடாத்தி மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ளவேண்டும். — இ

# நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கோட்டத்திலே விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக கிராமிய உற்பத்தி குழுக்களுக்கு சுமார் 72நீர் இறைக்கும் இயந்திரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு ஏற்ற ஒழுங்கு முறையிலே கிராமிய உற்பத்தி குழுக்கள்மூலம் சுழற்சி முறையில் பயன்படுத்துவதற்காகவே வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சியால் கிளிநொச்சிக்கோட்ட விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது -இ

# மாடுகளைக் கண்டு படையினர் சூடு

(வவுனியா)

இராணுவ முகாம்களை நோக்கி ஓடிய மாடுகளைக் கண்டு அச்சமடைந்த ஸ்ரீலங்கா படையினர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் நொச்சிமோட்டை இராணுவமுகாம் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

நொச்சிமோட்டை இராணுவ காவலரணில் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களை நோக்கி ஓடிய மாடுகளினால் அச்சமடைந்த படையினர் பதைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் அபாய ஒலியை எழுப்பி ஏனைய முகாம்களுக்கும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதன்போது கவச வாகனங்கள், டாங்கிகள் என்பனவும் உஷார் நிலையில் வைக்கப்பட்டனவாம்.

படையினர் துப்பாக்கிப்பிரயோகத்தினால் அச்சமடைந்த பொதுமக்கள் நிலத்தில் விழுந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டதாகவும் அறியப்படுகிறது -க-இ

## கண்டெடுக்கப்பட்ட பொருள்

திறப்புக்கோர்வை ஒன்று நாவற்குழிப் பாலத்தடியில் இருந்து திரு பி. சவிஸ் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது- உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

# ஜவுளிக் கொள்ளையர் காவல்துறையிடம் சிக்கினர்

(பருத்தித்துறை)

இரவு வேளையில் ஜவுளிக் கடைக் கூரையைப் பிரித்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான புடவை வகைகளை கொள்ளையடித்த கொள்ளையர் தமிழீழ காவல்துறையிடம் சிக்கிக் கொண்டனர். கொள்ளைப் பொருட்களைக் காவல்துறையினர் மீட்டுமுள்ளனர்.

பருத்தித்துறையில் உள்ள ஒரு ஜவுளிக் கடையிலேயே இக்கொள்ளை கடந்த மாதம் 4ம் திகதி நடைபெற்றிருந்தது. இக்கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய இக்கொள்ளையர் காஞ்சிபுரம் சேலை, மார்ட்டின்சேட் வகைகள், சாரவகைகள் உட்பட 2,00,000 ரூபா பெறுமதியான புடவை வகைகளை கொள்ளையடித்திருந்தனர்.

இக்கொள்ளை தொடர்பாக ஜவுளிக்கடை உரிமையாளர் பருத்தித்துறை தமிழீழ காவல்துறையில் புகார் செய்திருந்தார். இக்கொள்ளை சம்பந்தமாகப் புலன்விசாரணைகளில் ஈடுபட்ட காவல்துறையினர் கொள்ளைச் சந்தேக நபரைக் கைதுசெய்ததுடன் கொள்ளைப் பொருட்களையும் மீட்டனர். -52-சி


## பிரதிநிதிகள் தேவை

கமிஷன் அடிப்படையில் வர்த்தக ரீதியான அபிவிருத்தி வேலைக்கு பொறுப்புடன் கடமை புரிய எல்லா இடங்களிலும் ஆட்கள் தேவை. சகல விபரங்களுடனும் 15-11-93ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: A 3569
(எ- 3569) C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

எம்மிடம் திருத்த வேலைக்குத் தந்த ரேடியோ, ரீ. வி. டெக் ஸ்பீக்கர்கள் இதுவரையில் எடுக்காமல் இருப்பவர்களே, தந்தவர்கள் எம்மால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்து இவ்வாண்டு முடிவடைவதற்குள் மீளப்பெற்றுக் கொள்ளவும். இல்லையேல் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

ரேடியோ மனுவல்
121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் (ஏ 3572)

## 7-வது வெற்றுப்போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 2906 | 3256 | 3396 | 3464 |
| 2913 | 3283 | 3402 | 3510 |
| 3144 | 3295 | 3405 | 3555 |
| 3146 | 3310 | 3422 | 3558 |
| 3147 | 3319 | 3432 | 3590 |
| 3150 | 3323 | 3436 | 3595 |
| 3151 | 3335 | 3455 | 3600 |
| 3156 | 3339 | 3458 | 4035 |
| 3164 | 3351 | 3460 | 4046 |
| 3165 | 3363 | 3461 | 4048 |

8-வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள்; பங்குபற்றுவதற்கான நிபந்தனை: ஜாம், கோடியல் or பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச்சீட்டையும் பெற்றுக்கொள்ளவும்.

(ஏ-3575)

> **மணிவாக்கு**
> "தவறான வழிதான் எப்பொழுதும் பொருத்தமான வழிபோலக் காட்சியளிக்கிறது."

# அறுபது வருடங்கள் பட்டி தொட்டி எங்கும் ஒலித்த வாரியாரின் குரல் இன்று அடங்கிவிட்டது

(சென்னை)

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நேற்று முன்தினம் இறைவனடி சேர்ந்தார். அறுபது ஆண்டுகள் தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த அந்தக் குரல் இன்று அடங்கி விட்டது. இறக்கும்போது அவருக்கு வயது எண்பத்தி ஏழாகும்.

லண்டன், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளில் ஒரு மாதகாலத்திற்குமேல் சமயச்சொற்பொழிவாற்றி விட்டு விமானத்தில் பம்பாய் வந்து அங்கிருந்து வேறு ஒரு விமானமூலம் சென்னை திரும்பிக்கொண்டிருந்தபோது விமானத்திலேயே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு புகழுடம்பு எய்திவிட்டார்.

சென்னை விமான நிலையத்தில் அவரை வரவேற்கக் குழுமியிருந்த பக்தர்களுக்கு பெரிய அதிர்ச்சி. இந்த அதிர்ச்சியின் அதிர்வலைகள் இன்று தமிழகம் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் தமிழர் உள்ளங்களில் எதிரொலிக்கிறது.

வாரியார் அவர்கள் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்துள்ளார். தமது வெண்கலக் குரலாலும் ஆன்மீகத் தத்துவங்களுக்களித்த அரும்பெரும் விளக்கங்களாலும் உலகெங்கிலும் வாழும் கோடிக்கணக்கான தமிழ் மக்களை கவர்ந்துள்ளார்.

பல வெளிநாடுகளில் வாரியார் அவர்கள் சொற்பொழிவாற்றும்போது மொழிகளைக் கடந்து அந்நாட்டவர்கள் கூட அவரது சங்கீதத்தையும், தாளலயத்தையும் நேரில் ரசித்து அவருக்கு நேரிலேயே புகழ்மாலை சூட்டியுள்ளார்கள்.

எட்டு வயதிலேயே வெண்பா பாடும் வல்லமை பெற்ற அவரது திருப்புகழ் சொற்பொழிவுகள் மிகவும் பிரசித்தமானவை பாமர மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் எளிய தமிழில் இனிய நடையில் நகைச்சுவை மேலோங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர்.

வாரியார் அவர்கள் தமது சொற்பொழிவின்போது ஆன்மீகத் தத்துவங்களை கேட்போர் மனதில் பதியும் படியாக தற்கால சம்பவங்களுடனும் நடைமுறையுடனும் ஒப்பிட்டு சொற்பொழிவாற்றுவதில் வல்லமை படைத்தவர்.

சமஸ்கிருத மொழியிலும் புலமைபெற்ற வாரியார் வீணை வாசிப்பதிலும் வல்லவராக இருந்தார். வாரியார் அவர்கள் அமெரிக்கா பல ஐரோப்பிய நாடுகள், கிழக்கு மற்றும் தென்னாபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உட்பட பல நாடுகளில் மாதக்கணக்கில் சுற்றுப்பயணம் செய்து எண்ணற்ற ஆன்மீக சொற்பொழிவுகளை ஆற்றியவர்.

வாரியாரின் மறைவால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் சிறந்ததொரு ஆன்மீக வழிகாட்டியை இழந்து விட்டார்கள் என தமிழகத்தின் அறிஞர்கள், தலைவர்கள், அரசியல் கட்சிகள் தமது அஞ்சலிகளில் கூறியுள்ளனர். (கி-ம)

## நமது நோக்கு

### சபாநாயகர் முயற்சி

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் முன்நிபந்தனையின்றிப் பேசத் தயார் எனச் சபாநாயகர் முகமட் அறிவித்திருக்கிறார்.

உலகத்திற்குத் தெரிவுக்குழு என்ற அழகான பலூனைப் பறக்கவிட்டு கவனத்தைத் திசைதிருப்பிக் கொண்டிருந்தது. அதன் அறிக்கை வெளிவர இருக்கும் வேளையில் சபாநாயகர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்க் கட்சிகள் எதுவும் கலந்து கொள்ளாத தெரிவுக்குழுவின் அறிக்கை எதுவித பயனுமற்றது என அறிக்கை வெளிவர முன்பே கண்டனம் கூறியிருப்பது அரசின் பலூனை வெடிக்க வைத்துள்ளது.

இராணுவத் தீர்வைத் தூண்டிவிட்டுத் தென்னிலங்கையில் சில இனவாதிகள் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில், இராணுவத் தீர்வு பயன் தராது எனவும் அவர் அடித்துக் கூறியிருக்கிறார்.

சில இராணுவ அதிகாரிகள் ஏன் போரைத் தொடர விரும்புகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, திடீர்ச் செல்வந்தர்கள் ஆகிறார்கள் என்பதைத் தெரிவித்தனர் சபாநாயகர்.

அரசிலிருந்துகொண்டே அரசைச் சாடி வருகிறார் எனத் தொண்டமான்மீது சீறி விழுந்தவர்கள் இனி சபாநாயகர்மீதும் கண்டனம் தெரிவித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இதேவேளை, முஸ்லீம்களைக் கிழக்கிலே பலிகொடுக்க அரசு முயற்சிக்கின்றது என முஸ்லீம் காங்கிரஸ் துணைத் தலைவர் கலீல் மருதூர்க்கனி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இதேபோல, வெளிவிவகார அமைச்சர் ஹமீது சில முஸ்லீம் நலன்பேணும் அமைப்புக்களின் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்த கருத்துக்களும் முஸ்லீம்கள் விழிப்படைந்து, தமது உரிமைகளுக்கு அரசை நம்பிக் கொண்டிருக்கக் கூடாதென்ற எச்சரிக்கையை விடுத்திருந்தது.

இவை எல்லாவற்றையும் சேர்த்து ஆராய்ந்து பார்க்கும் போது ஆளும் கட்சியான ஐ.தே.க மீது தமிழர்களின் போராட்டம் தொடரும் வேளை, முஸ்லீம்களும் மலையகத்தவர்களும் அரசைவிட்டு விலகிச் செல்லும் போக்குத் தெரிகிறது.

இதனை அரசு உணர்ந்து, தனது தீவிர போக்கினைக் கைவிட்டு, அமைதித் தீர்வுக்கு வழிகாண வேண்டும்.

## 'இலக்கியங்கள் படைக்க சிறந்தது இன்றைய காலகட்டமே'

### இளங்குமரன் உரை

(யாழ்ப்பாணம்)

"இன்றைய காலகட்டங்களில் இலக்கியங்கள் படைக்கப்படாவிட்டால் தமிழினத்திற்கு என்றுமே இலக்கியங்கள் கிடைக்கவே கிடைக்காது உலகின் பல நாடுகளின் விடுதலைப் போராட்டத்தின் போது கவிஞர்களாக பலர் இருந்துள்ளார்கள். ஆனால் புதுவை இரத்தினதுரை கவிஞராக மட்டுமன்றி போராளியாகவும் நின்று எமது போராட்டத்தை பல கோணங்களில் வளர்த்தெடுத்துள்ளார்."

இவ்வாறு இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;—

புதுவை எழுத்திற்கு வர முடியும் போராளியாக களமாடியபோதும் ஆக்கிய ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இது தமிழின எழுச்சிக்கும், விடுதலை உணர்விற்கும் தேவையான தூண்டுகோலாக உள்ளது புதுவையுடைய இவ் இலக்கிய பேழை எளிமையான, இனிமையான சொல்வளத்தைக் கொண்டது.

பண்டைய சங்ககாலத்து இலக்கியங்கள் தமிழர் வரலாற்றினையும், தமிழர் வீரத்தையும் எடுத்துக்காட்டின என்றாலும் அவ்வீரத்தை பண்டைத் தமிழர் இன முன்னேற்றத்திற்கு பாடுபடவில்லை. சங்ககாலத்திற்குப் பின் இடைப்பட்ட காலத்தில் தமிழினம் தூங்கிக் கிடந்தபோது அதனை எழுப்பியவர்களாக பாரதியார், பாரதிதாசன், புதுவை இரத்தினதுரை ஆகியோரைக் குறிப்பிடலாம்" என்றார்.

தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. பாலகுமாரன் உரையாற்றுகையில்;—

"புதுமை, பழமை என்பன இணைந்ததுதான் புதுவை. காலத்தின் குரலாக ஒலிக்கின்ற கவிஞர் தலைவர் எம் தமிழீழக் கொட்டகையில் தன்மைக் கவிஞனை அமர்த்துவதைக் காண்பார்கள். இவருடைய கவிதைகளின் ஒவ்வொரு வரியிலும் தலைவனுடைய பெருமை தொனித்துக் கொண்டிருக்கிறது. எங்களுடைய விடிவு விரைவில் சேரும்" என்றார். —258-162-கி

## இராசிபலன்

9-11-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 24)

தசமி பி.ப. 3-22 வரை பூரம் மு.இ. 9-33 வரை சித்தாமிர்தயோகம் இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை சுபநேரம் காலை 10-35 முதல் 12-05 வரை.

மேடம்; இனம் புரியாத திகில், உடல்நல பாதிப்பு, காரிய பலிதம்

இடபம்: உறவினர் மனத்தாங்கல், ஏமாற்றம். பணமுடை.

மிதுனம்: துணிச்சலான செயல், வணப்புலக்கம், தாய்வழி அனுகூலம்

கடகம்: வீணான குழப்பம், பேச்சில் கடுமை, அலைச்சல்.

சிம்மம்: இன்பகரமான மனநிலை, தொழில் சிறப்பு, புகழ்.

கன்னி: குடும்ப பிணக்கு, அன்னியோன்ய குறைவு, மனக்குமுறல்.

துலாம்: விவகாரதி வைபவம், சுபச்செய்தி, பெண் போகம்

விருச்சிகம்: காரியசாதனை, நல்லமதிப்பு, அதிக முயற்சி.

தனுசு; வீண்விரயம் மனத்தளர்ச்சி, தொழில் கஷ்டம்

மகரம், காரசாரமான வாதம், மனக்கவலை, அதிகாரிகள் முரண்பாடு

கும்பம்: கலாரசனை, சமூக அந்தஸ்து. புதிய வருவாய்.

மீனம், நண்பர் உதவி, ஆறுதல் கடிதங்கள், வெகுமதி.

— ஜோஸ்யர்.

## வாந்திபேதியால் இதுவரை 14 பேர் மரணம் 473 பேர் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் கடந்த 3ம் திகதி புதன்கிழமை வரை 14பேர் வாந்திபேதி (காலரா) நோயினால் இறந்துள்ளனர் என்றும் மேலும் சுமார் 473 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கூடுதலாகக் குழந்தைகள், சிறுவர்கள், மற்றும் வயது முதிர்ந்தவர்களே கூடுதலாகப் பாதிப்படைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்த் தடுப்பிற்கான ஆலோசனைகள் தொடர்ந்தும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. —154-கி

## ஹஸ்ரத்பல் மசூதியை ராணுவம் தாக்காது

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் கடந்த 24 நாட்களாக இராணுவத்தின் முற்றுகையில் உள்ள 'ஹஸ்ரத்பல்' மசூதியை நோக்கி இராணுவம் தாக்குதல் எதனையும் நடத்தாது என தெரிவிக்கப்படுகிறது.

மசூதிக்குள் இருப்பவர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வுகாண அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாகவும் [illegible] கூறப்படுகிறது.

இதேவேளை பகுதியிலிருந்து [illegible] தினம் அதிகாலை தப்பிச்செல்ல சில போராளிகள் மேற்கொண்ட முயற்சியை இராணுவம் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -கி

## 31 லட்சம் ரூபா அபராதம்

(காத்மாண்டு)

உலகிலேயே மிக உயரமான "எவரெஸ்ட்" சிகரத்தில் தக்க அனுமதியின்றி மலை ஏறிய பிரிட்டனைச்சேர்ந்த குழு ஒன்றிற்கு நேபாள அரசு சுமார் 31 லட்சம் ரூபா அபராதமாக விதித்துள்ளது. -கி

## சைவசமயப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை வருடந்தோறும் நடத்தும் சைவசமயப் பரீட்சை, 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அட்டவணை, காரைநகர் கோத்தணி பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு மார்கழி திருவாதிரை நாளில் நடைபெறும் மணிவாசகர் விழாவில் பரிசில்கள், சான்றிதழ் வழங்கப்படும். (கி)

## பொருட்கள் தாராளம்

(அரியாலை)

யாழ். நகரில் தடை செய்யப்பட்ட பொருட்களைத் தவிர ஏனைய பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன சிறிய குடை ஒன்று 125 ரூபாவாகவும் பிளாஸ்டிக் வாளி ஒன்று 200 ரூபாவாகவும், லக்ஸ்பிறே ஒன்று 0 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. விலைகளில் மாற்றமில்லை எனினும் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. -59

## இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை வலம்புரி சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழா இன்று 9ம் திகதி நிலையத்தலைவர் தலைமையில் நடைபெறுகின்றது -52

★

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கிழக்கு, கலட்டி, அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பரிவாரமூர்த்திகளான நாகதம்பிரான் சந்தான கோபாலர், சனீஸ்வரன் ஆகிய தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன. இன்று செவ்வாய் [illegible] 12- [illegible] மாலை 5-0 மணி வரை அடியார்கள் எண்ணெய் சாத்துதல் இடம்பெறும். நாளை காலை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (கி)

**சொட்டு நீரும் எமது சொத்தே**

சிறையிலிருந்து

# பெனஸிரின் சகோதரர் தற்காலிகமாக விடுவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோவின் சகோதரர் முர்தாஸா பூட்டோ சிறைச்சாலையில் இருந்து தற்காலிகமாக நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான முர்தாஸா பூட்டோ, சிந்து மாகாண சட்டப் பேரவைத் தலைவராக நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த மாதம் 9ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில், சிந்து மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையாரான சுல்பிகார் அலி பூட்டோவின் கொலையை அடுத்து 16 வருடங்கள் வெளிநாடுகளில் வாசம் செய்துவிட்டுக் கடந்த வாரம் பாகிஸ்தான் வந்த போது, கராச்சி விமானநிலையத்தில் இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

தீவிரவாத இயக்கத்திற்குத் தலைமை தாங்குபவர் என்றும், பல குண்டு வெடிப்புச் சம்பவங்களில் தொடர்பு உடையவர் என்றும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க-இ

தொடரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும், ஊர்காவல் படையினராலும் தமிழ் இளைஞர்களிலும் சுட்டுக் கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விதவைகளின் பெருமளவினர் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவுமின்றி வறுமையின் கஷ்டத்தில் குடும்பங்களை ஒருவாறு நடத்தி வருவதாகவும் இப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (கி-இ)

போரை நிறுத்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் திரு. மார்க்கஸ் சேர்க்காஸ் தெரிவித்துள்ளதாவது: தனது தாய்நாட்டை உண்மையில் நேசிக்கும் எந்த ஒரு தமிழரும் தனது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவே நாட்டம் கொள்வார்.

ஆனால் நீங்களோ யுத்தத்திற்கு தயாராயுள்ளீர்கள். இதனை நீங்கள் நிறுத்தினால் மட்டுமே அமைச்சர் தொண்டமான் சமாதானத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதான முயற்சிகளை ஏற்படுத்த திரு. தொண்டமான் தயாராயுள்ளார். சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அரசாங்கம் தயாராக இருந்தால் மட்டுமே இம்முயற்சி பலனளிக்கும்.

இலங்கை சமாதானத்திற்கான வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

திரு. மார்க்கஸ் சேர்க்காஸ் கனடாவில் உள்ள இலங்கை தமிழர்களின் நலன்களை கவனித்து வருபவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

போர் விளைவுகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார் எனத் தெரியவருகிறது.

உள்நாட்டில் அகதிகளாக்கப்பட்டவர்களின் விடயம் குறித்து ஆராயும் பொருட்டு, 1992ல் ஐ. நா. மனித உரிமைகள் குழுவின் சிபார்சின் பேரில் ஐ. நா. அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த அமைப்புக்கு திரு. டெங் பொறுப்பாக உள்ளார்.

இலங்கை வரும் திரு. டெங், உள்நாட்டுப் போர் குறித்தும், அதனால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களின் பிரச்சினை குறித்தும் அரசுத் தரப்புடன் பல முக்கிய சந்திப்புக்களை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் போர் விளைவுகள் பற்றியும் இவர் விரிவாக ஆராய உள்ளார் எனவும் தெரியவருகிறது.

ஐ. நா. சபையின், உள்நாட்டில் மக்கள் அகதிகளாக்கப்படுவது குறித்தும், அது பற்றி ஆராய்வதற்குத் தனி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்ட பின்னர், அதற்குப் பொறுப்பானவர் ஆகிய நாடு ஒன்றுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இலங்கை ஆகும்.

இலங்கை அரசுத் தரப்பினருடனான சந்திப்பின் பின்னர் திரு. டெங், ஐ. நா. செயலருக்கு விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார். -கி-இ

அரசின் கடும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என இளைஞர்களை ஆயுதம் ஏந்தும்படியும் அவர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் ஆக்கபூர்வமாகவும் தியாக உணர்வுடனும் செயல்படவேண்டிய காலம் வந்துவிட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போருக்கு சமாதானத்தீர்வு ஏற்படும் என தமிழ் மக்கள் சிந்திக்கக்கூடாது என்றும் சமாதானப் பேச்சு நடத்தாது இராணுவத்தீர்வுதான் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அரசு திட்டத் தெளிவாக காட்டியிருப்பதாக அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இருதரப்பிலும் ஏற்பட்டுள்ள இம்முறுகல் நிலை பெரிதும் கவலையளிக்கும் விடயமாக இருப்பதாகவும் இதனை வலியுறுத்துவது போல் யாழ்ப்பாணம் சம்புப் படையினர் விழிப்பாக இருப்பதாகவும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (ஏ-இ)

அநுரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பதவியை திரு. அநுராவிற்கு வழங்குவதன் மூலம் உடனடியாக இப்பிரச்சினைக்கு ஏதாவது பலனைக் காணலாமென அரசு தரப்பில் சிலர் கருதுகின்றார்களாம்.

இதேவேளை திரு. அநுரா பண்டாரநாயக்கா வெளிவிவகார அமைச்சையே பெரிதும் விரும்புவதாகவும் அமைச்சர் ஹமீத்தை அப்பதவியை திரு. அநுராவிற்கு விட்டுக்கொடுக்குமாறு கேட்கப்படலாமெனவும் 'சண்டே ரைம்ஸ்' கூறியுள்ளது.

ஆனாலும் அமைச்சர் ஹமீதும் வெளிவிவகார அமைச்சர் பதவியையே விரும்புவதால் ஜனாதிபதிக்கு சில சிக்கல்கள் எழுந்துள்ளனவாம்.

இந்த இக்கட்டான நிலையை தவிர்ப்பதற்கு அமைச்சர் ஹமீத்தை தொடர்ந்தும் அப்பதவியில் இருக்க விட்டு, திரு. அநுராவுக்கு வெளிவிவகார மூலவள மற்றும் திட்ட அமுலாக்கல் என்ற புதிய அமைச்சொன்றை உருவாக்கி வழங்குவது குறித்து அரசியல் அமைப்பு, அரசியல் விவகார அமைச்சர் திரு. கே. என். சொக்ஸியுடன் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-இ)

வாரியாரின்

## பூதவுடல் நல்லடக்கம்

(சென்னை)

திருமுருக கிருபானந்தவாரியாரின் பூதவுடல், நேற்று மாலை 5-15 மணிக்கு அவரது சொந்த ஊரான காங்கேயநல்லூரில் உள்ள சமாதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெருந்திரளான மக்கள் கண்ணீர் மல்கவண்ணம் அவரது இறுதி யாத்திரையில் கலந்துகொண்டனர். -க-இ

## சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து லிமிடெட் ஊழியர்களின் கடந்த புரட்டாதி, ஐப்பசி ஆகிய இரண்டு மாதச் சம்பளம் கொடுப்பனவுகள் எதிர்வரும் 10-ம், 11ம் 12 ம் ஆகிய மூன்று திகதிகளில் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி வர்த்தக வங்கியில் பிற்பகல் 12-00 மணி முதல் மாலை 4-00 மணிவரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 10ம், 11ம் ஆண்டுகளில் சமூகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று, இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் அறிவித்துள்ளார். -இ

0 0 0

(யாழ்ப்பாணம்)

"ஆரம்ப சுகாதார வழிமுறைகளும் பெண்களும்" என்ற தலைப்பில் உரும்பிராய்ப் பிரதேச மாதர் சங்க அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை இன்று நடத்துவதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று மாலை 3-00 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் மாதர் சங்கத் தலைவி திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம், சரோஜா சிவச்சந்திரன், டாக்டர் ச. வே. நச்சினார்க்கினியன், டாக்டர் வ. இறிசாந்தா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கு அனுப்பப்படுவதால் தமது முகாம்களின் பாதுகாப்பு குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது அமைதியாக இருக்கும் புலிகள் படையினர் விலக்கப்பட்டதும் திடீர் தாக்குதல்களை நடாத்தலாமெனவும் அவர் அச்சம் தெரிவித்தார் (கி-இ)

மட்டு. பகுதியில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இளம் பெண்கள் உட்பட எவரும் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

ஜீவமலர் (39 வயது), செபமலர் (18 வயது) மற்றும் இவர்களது இரு சகோதரிகளுமே படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டது.

இதேவேளையில் பழுகாமம் பகுதி இராணுவத்தினர் இப்பகுதியைப் பல தடவைகள் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

படுவான்கரைப் பகுதியிலும் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதாகவும், பலர் படையினரால் அழைத்துச் செல்லப்படுவதாகவும், அவர்கள் விடுவிக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. -க-இ

வடக்கு—கிழக்கில்

# இராணுவ தேவைக்கு 4 லட்சம் கிடுகுகள் தேவை

(கொழும்பு)

இராணுவத்தின் பாதுகாப்பு அரண்களின் கூரைகள் வேய்வதற்கு வடக்கு-கிழக்கில் 4 லட்சம் கிடுகுகள் தேவையென்று இசிக் வைத்தியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கிடுகு ஆறு ரூபாவாக இருப்பதால் இதனை சகாயிக்க பொது மக்கள் கிடுகுகளை தந்து உதவவேண்டுமெனவும் கோரியுள்ளார். -ம-கி

படை தளபதி மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் பொலிசாரும், இராணுவத்தினரும் நடந்துகொண்ட முறைகளை நாம் இன்னும் மறந்துவிட முடியாது. இராணுவத்தளபதியின் ஆலோசனை அமுல்படுத்தப்படும் பட்சத்தில் அதன் மூலம் பல பயங்கரமான விளைவுகளே ஏற்படும்.

பாதுகாப்புப் படையினர் கிளாலிப்பகுதியில் மேற்கொண்ட யாழ்தேவி நடவடிக்கை தமக்கு வெற்றியைத் தந்ததாக ராணுவம் கூறினாலும், அதில் படையினர் தோல்வியையே தழுவியதாக பொதுசன தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து ஒரு பத்திரிகையாளருக்கு கொலைப்பயமுறுத்தலும் விடுக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு பகுதியில் இடம்பெறும் உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு மறைக்கும் விதமாகவே இராணுவ உயர் பீடம் இவ்விதம் நடந்துகொள்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிஸார் உட்பட முப்படையினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருக்கும் நோக்கமாகவே இராணுவத் தளபதியின் ஆலோசனை அமைந்துள்ளது.

இராணுவ இரகசியங்களைப் பாதுகாக்கவேண்டியது, இராணுவத்தின் உயர் பீடத்தைச் சேர்ந்தோரின் கடமையாகும். அதற்கு அவர்களே பொறுப்பு.

ஆனால் இராணுவ நடவடிக்கைகளை அறிந்துகொள்ளும் உரிமை நாட்டின் சகல மக்களுக்கும் உண்டு. இது அவர்களது அடிப்படை உரிமையாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ)

## சலுகை விலையில் சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வித்திணைக்கள நலன்புரிக்கழகம் அதன் 114 அங்கத்தவர்களுக்கு சலுகை விலையில் சைக்கிள்களை கொழும்பிலிருந்து தருவித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (162-இ

வட-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்களும் சமஷ்டித் தீர்வுக்கு எதிர்ப்பு இல்லை எனவும் நாடு பிரிவு படுவதை ஒருபோதும் விரும்பவில்லை எனவும் தெரிவித்ததாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

எனினும் 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என இப்பிரச்சினைக்கு மேற்படி தீர்வை யார் முன்வைப்பது என்பதிலேயே பலரும் சறுக்கி வருவதாகவும் 'சண்டே ஐலண்ட்' கூறியுள்ளது. (சி-இ)

## மரண அறிவித்தல்

### திருமதி கணேசபிள்ளை நாகரத்தினம்

திருமதி கணேசபிள்ளை நாகரத்தினம் இந்தியாவில் காலமாகிவிட்டார். அன்னார் வண்ணை. நாச்சிமார் கோவிலடி தவில் வித்துவான் அமரர் கணேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சிவதாஸ் (நாதஸ்வர வித்துவான்), சிவகுமார், சிவனேஸ்வரி, சிவசங்கர், சிவரஞ்சினி, சிவநந்தினி, சிவராம், சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜநாதன், சேகர், கண்ணன், சர்வேஸ்வரி, சுந்தரி, சுசி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (07-11-93) மாலை 4-00 மணிக்கு இந்தியாவில், திருவானைக்காவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
க. சிவதாஸ்
(மகன்)

நாச்சிமார் கோவிலடி,
தலையாழி.

(ஏ-3578)

### துரைச்சாமிஐயர் தியாகராசாஐயர்

(இராசா ஐயர்)

(ஈவினை சக்தி கற்பக விநாயகர் ஆதீனம்)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசா ஐயர் 08-11-93ல் காலமானார். இவர் காலஞ்சென்ற பாலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், ஞானசேகர ஐயர் (உதவி வைத்திய அதிகாரி, கண்டி), கெங்காதரக்குருக்கள் (விநாயகர் தேவஸ்தானம்), சுவாமிநாதஐயர் (இலங்கை வங்கி திருகோணமலை), லலிதாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானலட்சுமி, விஜயலட்சுமி, நிர்மலா, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜேஸ்வரன், சர்வேஸ்வரன், கமலேஸ்வரன், பாலேஸ்வரன், பாலச்சந்திரன், வசந்தரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 09-11-93 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்கு அன்னாரின் ஈவினை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காக ஈவினை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்: கெங்காதரக் குருக்கள் (மகன்)

(கி-587)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10, 336/Bt